**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040821

1. District : மாவட்டம் கள்ளக்குறிச்சி PS: காவல்நிலையம் VE AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் [illegible]/2022 Date: நாள் 15.10.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: 1988. as amended Amendment Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 14.10.2022
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2022 Time : நேரம் இரவு 11.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி இயக்குநர் அலுவலகம், ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம். திருநாவலூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி M.S. ஜெயசக்தி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் துணை ஆய்வு குழு அலுவலர் (g) Address : முகவரி கடலூர் - விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. T. சுப்ரமணியன். வேளாண் உதவி இயக்குநர் 2. திரு. P. செந்தில்நாதன், [illegible] வேளாண் . 3. செல்வி. K. கீர்த்தனா. துணை வேளாண் அலுவலர், 4. திரு. S. பிரகாஷ் உதவி வேளாண் அலுவலர். ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், திருநாவலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 14.10.2022 ந்தேதி 23.30 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருமதி M.S.ஜெயசெல்வி, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், M.S.ஜெயசெல்வி, துணைஆய்வுக்குழு அலுவலர், கடலூர். விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:அ/749/2022, நாள்:14.10.2022 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - வேளாண்மைத்துறை - வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் - 14.10.2022 அன்று கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:14.10.2022. இன்று 14.10.2022 தேதி மதியம் 12.00 மணிக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை வட்டம், திருநாவலூர் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் பணிபுரியும் அரசு அதிகாரிகள் அரசு மானியத்தில் விற்பனை செய்யப்படும் உளுந்து விதைகளை வாங்கும் விவசாயிகளிடம் ஒரு கிலோவுக்கு 40 ரூபாய் வீதம் அதிகாமாக லஞ்சமாக பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சுமார் 15.00 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.E.அருண்ராஜ்

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

ம.செ.ஜெயசெல்வி

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.10.2022. 14.00 hrs

Name: பெயர் ..........E.அருண்ராஜ்..........
Rank: நிலை ......ஆய்வாளர்......No. எண் ..........

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakuruchi Detachment.

அவர்களிடம் திருநாவலூார் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் விதை சேமிப்பு கிடங்கினை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினருடன் 15.30 மணிக்கு புறப்பட்டு மாலை சுமார் 16.20 மணிக்கு திருநாவலூார் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலக வளாகத்தில் உள்ள விதை சேமிப்பு கிடங்கு சென்று அங்கிருந்த பணியாளர்கள் மற்றும் உளுந்துவிதை வாங்க வந்த விவசாயிகளிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அங்கிருந்தவர்களை அலுவலகத்திலேயே அமரச் செய்தோம். மேற்படி அலுவலகத்தில் திரு.Tசுப்ரமணியன், வேளாண்மை உதவி இயக்குநர், செல்வி.R.ஜீவிதா, இளநிலை உதவியாளர்/துணை கிடங்கு மேலாளர், திரு.B.பிரகாஷ், உதவி வேளாண்மை அலுவலர், திரு.R.கோபாலகிருஷ்ணன், துணை வேளாண்அலுவலர், திரு.K.ஏழுமலை, உதவி வேளாண்மை அலுவலர், திரு.D.புகழேந்தி, உதவி வேளாண் அலுவலர், செல்வி.S.சௌந்தர்யா உதவி வேளாண் அலுவலர், திருமதி.V.மோனிஷா உதவி வேளாண் அலுவலர், மற்றும் திரு.V.ராமச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர் ஆகிய பணியாளர்கள் இருந்தனர். மேலும், விதை உளுந்து வாங்கிக்கொண்டு செல்ல தயாராக இருந்த விவசாயிகளான திருமதி.B.தெய்வாணை, திருமதி.V.ஜெலஸ்டீன், திரு.K.சாமிக்கண்ணு மற்றும் திருமதி.S.விசாலாட்சி ஆகியோர் இருந்தனர். அப்போது அங்கிருந்த விவசாயிகளான திருமதி.B.தெய்வாணை, மற்றும் திருமதி.V.ஜெலஸ்டீன் ஆகியோர்களை விசாரித்தபோது தங்கள் நிலத்தில் உளுந்து பயிர் செய்வதற்காக அரசு மானியத்தில் வழங்கப்படும் உளுந்து விதை வாங்க ஆன்லைனில் பதிவு செய்திருந்ததாகவும், அதன்படி உளுந்து விதை வாங்க வந்ததாகவும் அதன்படி இருவரும் தலா 40 கிலோ வீதம் 80 கிலோ உளுந்து விதை வாங்கியதாகவும் அதற்காக ஒரு கிலோவிற்கு ரூபாய் 90 வீதம் தலா ரூபாய் 3,600 வீதம் 7,200 கிடங்கு மேலாளரிடம் கொடுத்ததாகவும் விதையுடன் எந்தவித இடுபொருட்களும் கொடுக்கவில்லை என்றும் விதை வாங்கிய தொகைக்கு ரசீது வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர். பின்பு விவசாயி திரு.K.சாமிக்கண்ணு என்பவரை விசாரிக்க அவர் 20 கிலோ உளுந்து விதை வாங்கியதாகவும் அதற்காக ஒரு கிலோவிற்கு ரூபாய் 90 வீதம் தலா ரூபாய் 1,800 கிடங்கு மேலாளரிடம் கொடுத்ததாகவும் விதையுடன் எந்தவித இடுபொருட்களும் கொடுக்கவில்லை என்றும் விதை வாங்கிய தொகைக்கு ரசீது வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். விவசாயி திருமதி.விசாலாட்சியை விசாரித்தபோது அவர் 60 கிலோ உளுந்து விதை வாங்கியதாகவும் அதற்காக ஒரு கிலோவிற்கு ரூபாய் 90 வீதம் தலா ரூபாய் 5,400 கிடங்கு மேலாளரிடம் கொடுத்ததாகவும் விதையுடன் எந்தவித இடுபொருட்களும் கொடுக்கவில்லை என்றும் விதை வாங்கிய தொகைக்கு ரசீது வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். திரு.Tசுப்ரமணியன், வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களை விசாரிக்க அவர் திருநாவலூார் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரிந்து வருவதாகவும் தனது பணியானது தனது வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு இடுபொருள்கள் மற்றும் விதைகள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பை உறுதி செய்தல். அதுபோன்று மேற்படி பொருட்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைபொருட்கள், இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் வழங்குவதை உறுதி செய்தல் தினமும் கிடங்கில் இருந்து தினந்தோறும் முறையாக உரிய விலையில் விற்பனை செய்யப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும்

விவசாயிகளின் நிலங்களை பார்வையிடுதல் விவசாயிகளுக்கு அரசு திட்டங்களை தெரிவித்தல் மற்றும் செயல்படுத்துதல் போன்றவையாகும் என தெரிவித்தார். பின்பு அவரிடம் ஒரு கிலோ உளுந்து விதை அரசு மானியம் போக ரூபாய் 50 க்கு விற்பனை செய்யாமல் ரூபாய் 90 க்கு விற்பனை செய்வது சம்மந்தமாக கேட்டபோது அவர் ஒரு கிலோ விதை உளுந்து ரூபாய் 50 என்பதை ஒப்புக்கொண்டு மீதித்தொகை ரூபாய் 40 இடு பொருட்கள் வழங்குவதற்காக பெறப்பட்டது என்று தெரிவித்தார். ஆனால் அவர் கூறியதுபோல் விவசாயிகளுக்கு எந்தவித இடுபொருட்களும் வழங்கப்படவில்லை என்பது விவசாயிகளிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்தது. மேலும், விதைகள் விற்பனை செய்ததற்கு எந்தவித ரசீதும் வழங்கப்படாதது குறித்து கேட்க அவர் ரசீது வழங்கப்படாதற்கு கிடங்கு மேலாளரே பொறுப்பு என தெரிவித்தார். பின்பு கிடங்கின் மேலாளர் குறித்து உதவி இயக்குநரிடம் விசாரிக்க அவர் கிடங்கு மேலாளராக திரு.P.செந்தில் நாதன் என்பவர் பணிபுரிந்து வருவதாகவும் அவர்தான் கிடங்கின் முழு பொறுப்பு அதிகாரி என்றும் அவர் மதியம் வரை விவசாயிகளுக் விதை உளுந்து விற்பனை செய்தார் என்றும் பின்பு சுமார் 14.30 மணிக்கு 13.10.2022ந்தேதி விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விதை உளுந்துக்கான தொகையினை உளுந்தூர்பேட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் செலுத்துவதற்காக சென்றுள்ளார் என்றும் கூறினார். பின்பு உதவி இயக்குநர் அவர்களிடம் செந்தில் நாதனை தொலைபேசியில் தொடர்புகொண்டு அலுவலகம் வரவழைக்குமாறு அறிவுறுத்தியதின் பேரில் அதன்படி அவர் தொலைபேசியில் அலுவலகம் வருமாறு அழைத்தார். பின்பு மேற்படி கிடங்கில் இருந்த செல்வி.R.ஜீவிதா என்பவரை விசாரிக்க அவர் களமருதூர் துணை வேளாண்மை அலுவலர் அலுவலகத்தில் உள்ள துணை கிடங்கில் துணை கிடங்கு மேலாளராக பணி நியமனம் செயப்பட்டதாகவும், அங்கு அலுவலகம் தற்போதுவரை திறக்கப்படாததால் களமருதூர் துணை வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்களை திருநாவலூர் கிடங்கில் இருந்து விற்பனை செய்வது விற்பனை செய்த தொகைகளை கிடங்கு மேலாளர் மூலம் வங்கியில் செலுத்துவது போன்ற பணிகள் செய்து வருவதாக தெரிவித்தார். பின்பு அவரை நான் சோதனை செய்தபோது அவரிடம் மொத்தம் ரூபாய் 85,200/- (என்பத்தைந்தாயிரத்து இரு நூறு) இருந்தது குறித்து கேட்க இன்று 200 கிலோ விதை உளுந்து ரூபாய் 90 வீதம் விற்ற தொகை ரூபாய் 18,000 என்றும் மீதமுள்ள 67,200/- ஆனது நேற்று 13.10.2022 ந்தேதி 1680 கிலோ விதை உளுந்து கிலோ ரூபாய் 90 வீதம் விற்பனை செய்த மொத்த தொகையான ரூபாய் 1,51,200 ல் ஒரு கிலோவிற்கு ரூபாய் 50 வீதம் 84,000/- வங்கியில் செலுத்தியது போக மீதி தொகை 67,200/- என தெரிவித்தார். மேலும், விதை உளுந்து விற்கப்படும்போது அரசு மானியத்தொகை போக கிலோ ரூபாய் 50க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் ஆனால் உதவி இயக்குநர் திரு.சுப்ரமணியன் என்பவரின் அறிவுரையின் பேரில்தான் கிலோ ரூபாய் 90க்கு விற்பனை செய்ததாக தெரிவித்தார். பின்பு இன்று விற்பனை செய்த தொகை 200 கிலோவிற்கான உரிய தொகை விற்பனை தொகையான ரூபாய் 50 வீதம் கணக்கிட்டு ரூபாய் 10,000 திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மீத தொகை ரூபாய் 8,000/- ஆக 13.10.2022 மற்றும் 14.10.2022 ஆகிய தேதிகளில் கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை என தெரியவந்ததால் அந்த தொகை ரூபாய் 75,200/- ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு அங்கிருந்த திரு.B.பிரகாஷ் என்பவரை விசாரிக்க அவர் தான் சேந்தநாடு உதவி வேளாண் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் கூடுதலாக சேந்தநாடு

துணை கிடங்கு மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், சேந்தநாடு துணை வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் விற்பனை செய்வது விற்பனை செய்த தொகைகளை கிடங்குமேலாளர் மூலம் வங்கியில் செலுத்துவது போன்ற பணிகள் செய்து வருவதாக தெரிவித்தார். பின்பு அவரை நான் சோதனை செய்தபோது அவரிடம் மொத்தம் ரூபாய் 59,490/- (ஐம்பத்தி ஒன்பதாயிரத்து நாநூற்று தொன்இரு நூறு) இருந்தது அந்த தொகை குறித்து கேட்க அவர் 13.10.2022 மற்றும் 14.10.2022 ஆகிய தேதிகளில் விவசாயிகளுக்கு 661 கிலோ விதை உளுந்து கிலோ ரூபாய் 90 வீதம் விற்பனை செய்த தொகை என தெரிவித்தார். மேலும், விதை உளுந்து விற்கப்படும்போது அரசு மானியத்தொகை போக கிலோ ரூபாய் 50க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் ஆனால் உதவி இயக்குநர் திரு.சுப்ரமணியன் என்பவரின் அறிவுரையின் பேரில்தான் கிலோ ரூபாய் 90க்கு விற்பனை செய்ததாக தெரிவித்தார். மேற்கண்ட 661 கிலோவிற்கான உரிய தொகை விற்பனை தொகையான ரூபாய் 50 வீதம் கணக்கிட்டு ரூபாய் 33,050/- திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மீத தொகை ரூபாய் 26440 ஆனது 13.10.2022 மற்றும் 14.10.2022 ஆகிய தேதிகளில் கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை என தெரியவந்ததால் அந்த தொகை ரூபாய் 26,440/- ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு சுமார் 17.00 மணிக்கு கிடங்கு மேலாளர் திரு.செந்தில்நாதன் கிடங்கு அலுவலகத்திற்கு வந்தார். அவரிடம் விசாரிக்க அவர் தான் திருநாவலூர் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் உள்ள இடுபொருள் கிடங்கில் கிடங்கு மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், திருநாவலூர் வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் விற்பனை செய்வது விற்பனை செய்த தொகைகளை வங்கியில் செலுத்துவது போன்ற பணிகள் செய்து வருவதாக தெரிவித்தார். பின்பு அவரிடம் விவசாயிகளிடம் உளுந்து விதை விற்பனை செய்தபோது அதிகப்படியாக ரூபாய் 40 வசூலித்தது குறித்து கேட்க அவர் கடந்த 10.10.2022 ந்தேதி முதல் 13.10.2022 ந்தேதிவரை 6286 கிலோ விதை உளுந்து விற்பனை செய்ததாகவும் அதில் அதிகப்படியாக கிலோ ஒன்றுக்கு ரூபாய் 40 வீதம் வசூலித்த தொகை 2,51,440/- ஒரு வெள்ளைப்பையில் பீரோவில் வைத்துள்ளதாக கூறி அதனை எடுத்து ஆஜர் செய்தார் மேற்படி தொகை கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை என தெரியவந்ததால் அந்த தொகை ரூபாய் 2,51,440/- ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு இன்று 14.10.2022 ந்தேதி விவசாயிகளுக்கு விற்பனை செய்த விதை உளுந்து குறித்து கேட்க அவர் இன்று 14.10.2022 ந்தேதி 1830 கிலோ விதை உளுந்து கிலோ ரூபாய் 90 வீதம் விற்பனை செய்த தொகை ரூபாய் 1,64,700/- மற்றொரு வெள்ளைப்பையில் பீரோவில் வைத்துள்ளதாகவும் கூறி அதனை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். மேலும், விதை உளுந்து விற்கப்படும்போது அரசு மானியத்தொகை போக கிலோ ரூபாய் 50க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் ஆனால் உதவி இயக்குநர் திரு.சுப்ரமணியன் என்பவரின் அறிவுரையின் பேரில்தான் கிலோ ரூபாய் 90க்கு விற்பனை செய்ததாக தெரிவித்தார். பின்பு இன்று 14.10.2022 ந்தேதி 1830 கிலோ விதை உளுந்து கிலோ ரூபாய் 90 வீதம் விற்பனை செய்த தொகை ரூபாய் 1,64,700/- தொகையில் 1830 கிலோவிற்கான உரிய தொகை விற்பனை தொகையான ரூபாய் 50 வீதம் கணக்கிட்டு ரூபாய் 91,500/- திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மீத தொகை ரூபாய் 73,200/- கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை என தெரியவந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக

கைப்பற்றினேன். மேற்படி வகையில் திரு.செந்தில் நாதன் என்பவரிடம் இருந்து மொத்தம் ரூபாய் 3,24,640/- விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு மேற்படி கிடங்கில் இருந்த திரு.R.கோபாலகிருஷ்ணன் துணை வேளாண்மை அலுவலரை விசாரிக்க அவர் தான் துணை வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் தனது அலுவலகம் களம்ருதூரில் இருப்பதாகவும், தனது நிர்வாகத்தின் கீழ் மூன்று வேளாண்மை அலுவலர்களை கண்காணித்தல் மற்றும் விவசாயிகளின் நிலங்களுக்கு சென்று பயிர்களை பார்வையிட்டு விவசாயிகளுக்கு உரிய அறிவுரை வழங்குதல் அரசு திட்டங்களை பற்றி தெரிவித்தல் மற்றும் உரிய இடுபொருள்கள் மானியவிலையில் வழங்கப்படும் விபரத்தை தெரிவித்து அவர்களுக் கிடைக்க ஏற்பாடு செய்தல் போன்றவையாகும் எனவும் இன்று திருநாவலூர் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்திற்கு உதவி வேளாண் அலுவலர்களுக்கு வாராந்ததிர ஆய்வுக்கூட்டம் நடத்துவதற்காக வந்ததாக தொவித்தார். மேலும், விதை உளுந்து ரூபாய் 90 க்கு விற்பனை செய்வது தொடர்பாக கேட்டபோது விவசாயிகளுக்கு அரசு மானியத்தில் விதை உளுந்து ரூபாய் 50க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் அதிப்படியாக ரூபாய் 40 வசூலித்தது சட்டப்படி தவறுதான் என்றும் கூறினார். பின்பு அலுவலகத்தில் இருந்த உதவி வேளாண்மை அலுவலர்களான திரு.K.ஏழுமலை திரு.D.புகழேந்தி, செல்வி.S.சௌந்தர்யா திருமதி.V.மோனிஷா மற்றும் திரு.V.ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் வாரந்திர ஆய்வுக்கூட்டத்திற்கு வந்ததாக கூறினர். மேலும், விதை உளுந்து ரூபாய் 90 க்கு விற்பனை செய்வது தொடர்பாக கேட்டபோது விவசாயிகளுக்கு அரசு மானியத்தில் விதை உளுந்து ரூபாய் 50க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் அதிப்படியாக ரூபாய் 40 வசூலித்தது சட்டப்படி தவறுதான் என்றும் கூறினார்கள். பின்பு மேற்படி திடீராய்வு குறித்து உடனடி உயர் அதிகாரிகளான இணை இயக்குநர் திருமதி.வேல்விழி மற்றும் துணை இயக்குநர் திரு.S.சுந்தரம் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்து அலுவலகம் வருமாறு அழைத்தேன். அதன்படி அவர்கள் வந்ததும் நடந்த விபரத்தை எடுத்து கூறப்பட்டது. மேலும் அவர்களை திடீராய்வு முடியும் வரை அருகில் இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டது அதன்படி அவர்கள் இருவரும் மேற்படி திடீராய்வு முழுவதும் உடனிருந்தார்கள். பின்பு மேற்படி வகையில் மொத்தம் ரூபாய் 4,26,280/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்தாராயிரத்து இருநூற்று என்பது மட்டும்) விவசாயிகளிடம் கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை என தெரியவந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணைக்காக திருநாவலூர், களமருதூர் மற்றும் சேந்தநாடு ஆகிய கிடங்குளில் விற்பனை செய்யப்படும் விதை உளுந்து மற்றும் இடுபொருள்களுக்கான மூன்று பணப்பதிவேடுகளையும், திருநாவலூர், களமருதூர் மற்றும் சேந்தநாடு ஆகிய கிடங்குளில் விற்பனை செய்யப்படும் விதை உளுந்து மற்றும் இடுபொருள்களுக்கான மூன்று இருப்புப் பதிவேடுகளையும், திருநாவலூர் மற்றும் சேந்தநாடு ஆகிய கிடங்குளில் விற்பனை செய்யப்படும் விதை உளுந்து மற்றும் இடுபொருள்களுக்கான மூன்று மானியப் பதிவேடுகளையும், வருகைப்பதிவேடுகள் இரண்டு மற்றும் இயக்கப் பதிவேடு (Movement Register)-1 ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றினேன். பிறகு அலுவலகத்தில் இருந்த திரு.T.சுப்ரமணியன், வேளாண்மை உதவி இயக்குநர் திருநாவலூர் ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், அலுவலக பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் உள்பட மொத்தம் பதிநான்கு நபர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் இருந்த பணியாளர்களுக்கு எந்தவித மனம் கோணாமல் நடந்துகொள்ளப்பட்டது. அதுபோன்று அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கு எந்தவித சேதாரமும் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டது. இந்த திடீராய்வு மகஜர் இன்று 14.10.2022 ந்தேதி இரவு 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வகையில் மொத்தம் ரூபாய் 4,26,280/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) விவசாயிகளிடம் கிலோவிற்கு ரூபாய் 40 வீதம் அதிகப்படியாக பெற்ற தொகை சம்பந்தமாக திரு.T.சுப்பரமணியன், வேளாண்மை உதவி இயக்குநர், ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், திருநாவலூர் திரு.P.செந்தில்நாதன் கிடங்கு மேலாளர், ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், திருநாவலூர், செல்வி.R.ஜீவிதா இளநிலை உதவியாளர்/துணை கிடங்கு மேலாளர், களமருதூர், ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், திருநாவலூர் மற்றும் திரு.B.பிரகாஷ் உதவி வேளாண் அலுவலர், ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், திருநாவலூர், ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.தங்கள் உண்மையுள்ள, (XXXX) ஒப்பம் துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜர் 2.ரொக்கம் ரூபாய் 4,26,280/- 3.வாக்குமூலங்கள் (14 நபர்கள்)

Sir

Received the complainant and registered the same in Kallakurichi V&AC, Cr.No.01/2022 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in P.C (Amendment) Act 2018 on 15.10.2022 at 12.00hrs (sd) E.Arunraj, 15.10.2022, Inspector of Police, V&AC, Kallakurichi.

இதன் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(E.அருண்ராஜ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கள்ளக்குறிச்சி.